பதிவுசெய்யப்பெற்ற பதிவுப்பத்திரிகையாகப்

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889) யாழ்ப்பாணம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆல 1-க்கு | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரு. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரு. 9-40 |
| ,, அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, கால்கலம் | ரு. 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஸூ சித்திரைமீ ௩௦௨ (1924 மே 12) திங்கட்கிழமை. { இலக்கம்—அ௫

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

**அஷ்டபந்தன மருந்து.**

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சாக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

சீ. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(H. 21)

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
**அறைக்கீரைவிரைத்தைலம்.**



**இதன் குணம்:**

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காதிரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீஸில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சுரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

**"சுதேசி".**

தேசிய வாரமிருமுறைப்பத்திரிகை. பத்திராதிபர். பி. கோதண்டராமன் எம். ஏ. பி. எல். தற்கால அரசியலைப்பற்றியும், சமுதாய விஷயங்களைப்பற்றியும், சுருக்கமாயும், விளக்கமாயும் உலகத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றியும் அறியவேண்டியவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டும்.

சந்தாவிபரம்.
வருட சந்தா ரூபா 7.
6 மாதச் சந்தா ரூ. 3 அணா 12
3 மாதச் சந்தா ரூ 2
1 மாத சந்தா அணா 11

14, வாணியர் தெருவு,
சென்னை.

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கிம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.
ஜெகப்பிரசித்தி பெற்ற
**சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.**

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனாமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல [illegible]ங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | |
|---|---|---|
| 40 நாள் 80 வேளை டப்பி 1க்கு விலை ரூபா | | 10—0—0 |
| 20 ,, 40 ,, ,, ,, | ,, | 5—0—0 |
| 10 ,, 20 ,, ,, ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கிம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA).

(H. 27)

**புதத்க விளம்பரம்.**

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

**திறமானமங்களூர்ஓடுகள்**

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.

(H. 23).

**பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.**

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

| | | | |
|---|---|---|---|
| 1 தெ. ஜோடிப்பு | 1க்கு | ரூபா 4 | அணா 8 |
| 2 தெ ,, | ,, | ரூபா 3 | அணா 4 |
| 3 தெ ,, | ,, | ரூபா 2 | அணா 8 |

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

**"ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்.**
**(Standard Tiles)**

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம், இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றுவருடகாலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.

(H. 25.)

**புத்தக விளம்பரம்.**

| (தபாற்செலவு வேறு). | ரு | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| டை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4 பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 47.)

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக**

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵ சித்திரை௴ 30௳ திங்கட்கிழமை.


## பிரதிநிதித் தெரிவு.

சில மாசங்களாக இலங்கை முழுவதிலும் விசேஷமாகப் பிரஸ்தாபிக்கப்படும் விவகாரம் சட்ட நிரூபண சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய் தனுப்புவதைப் பற்றியதேயாம். இத்தெரிவு விஷயம் ஏனைய மாகாணங்களைக்காட்டிலும் வடமாகாணத்திலேயே அதிக முயற்சியோடு நடைபெறுகின்றது. இரண்டு பிரிவுகளை யொழித்த மற்றைய பிரிவுகளுக்குப் பிரிவிற்கு இருவரும் இருவருக்கு மேற்பட்ட தொகையினரும் முற்பட்டு நின்று பலவகையான முயற்சிகள் செய்கின்றனர். ஒரு பிரிவிற்குப் பிரதிநிதிகளாக வருதற்கு இருவர் மூவர் முற்பட்டு நில்லாது ஒருவர் மாத்திரம் முற்பட்டு நின்றால் அதிக பொருட்செலவும் சிரமமும் மனஸ்தாபமும் ஏற்படாவென்பது இங்குள்ளார் பலர் கொள்கையாகும். ஆனால் அக்கொள்கை தக்கதோ வென்பதைச் சிறிது சிந்தித்தல்வேண்டும். ஒரு பிரிவிற்குப் பிரதிநிதியாக வருதற்கு இருவர் மூவர் முற்பட்டு நிற்பதனாலே பிரதிநிதியாக வரவிருப்பவரும் தெரிவுசெய்தனுப்பும் உரிமை பூண்ட சனங்களும் பெரும் நன்மையை யடைகின்றார்கள்.

பிரதிநிதியாக வர விரும்புபவர் ஒவ்வொருவரும் தாம் அநுகூலமடைதல் வேண்டுமெனத் தனித்தனி அபேட்சை கொண்டு தம்மைத் தெரிவுசெய்தனுப்பும் உரிமைபூண்ட ஒவ்வொருவர் வீட்டிற்குஞ் சென்று அவரோடு அளவளாவிக் கலந்து தாம் சட்ட நிரூபண சபைக்கு அனுப்பப்பட்டால் அங்கு ஊரவர்பொருட்டுச் செய்யவிருக்கும் நன்மைகளையும் தெரிவுரிமை பூண்டோர்க்குரிய சுதந்திரங்களையும் நன்கு எடுத்துப் போதிக்கவேண்டியவராகின்றார். இங்ஙனம் போதிக்கச் செல்லும்போது தம்முடைய பிரிவிலேயுள்ள சனங்களின் செல்வ தாரித்திரிய நிலைமைகளை உள்ளபடி உணர்ந்துகொள்ளுகின்றார் ஊரவர்களுக்கு நேர்ந்துள்ள குறைகள் இன்னின்னவென்பதை இவர் நன்கு உணர்ந்துகொள்ளுகின்றார். தம்முடைய எதிரியிலும்பார்க்கத் தாம் அரசியல் விஷயங்களை நன்றாய் விளங்கிக்கொள்ளவேண்டு மென்னும் விருப்பங்கொண்டு அவற்றைப் படித்துக்கொள்கின்றார். தம்மிடத்திற் செருக்கு இன்னாச்சொல் அலட்சியம் முதலிய தீயகுணங்கள் இயல்பாகவுள்ளனவேனும் அவற்றை யெல்லாம் அறவேயொழித்து, இன்சொல் அவதானம் தாழ்மை முதலிய குணங்களை அநுசரித்து ஒவ்வொருவருக்குந் தகை கூப்புதலாகிய மரியாதையையுஞ் செய்து காலகதியில் உலக நன்மையையே விரும்பும் உள்ள முடையவராகின்றார். இயல்பாகவே அதிக வாக்கு வல்லபமில்லாதவராயினும் இம்முயற்சியிற் றலையிட்டபின் தாம் நினைத்ததை மற்றவர்களுக்கு உணர்த்தக்கூடிய ஆற்றலைப் பெற்றுக்கொள்ளுகின்றார். பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டகாலத்திலும், தாம் இப்பிரதிநிதித்துவத்தை எத்துணைச் சிரமத்தோடும் பொருட் செலவோடும் பெற்றாரென்பதை யுணர்ந்து சட்ட நிரூபண சபையில் மனப்பூர்வமாக உழைக்கின்றார்.

இனி, தெரிவுரிமைபூண்டவர்கள் இப்படி முற்பட்டு நிற்பவரின் பொருட்செலவில் அரசியல் விவகாரங்களையும் தமக்குரிய உரிமைகளையும் படித்துக்கொள்ளுகிறார்கள். தக்கவரின்னார் தகாதவரின்னாரென்பதை நன்கு விளங்கிக்கொள்ளுகிறார்கள். முகமன்பாராது தங்கள் பொது நன்மையை விரும்பித் தக்கவரையே தெரிவுசெய்தல்வேண்டுமென்று நினைக்கத் தொடங்குகிறார்கள். தனியே ஒருவர் மாத்திரம் முற்பட்டு நிற்பரேல் மேலே சொன்ன நன்மைகளை முற்பட்டு நிற்பவர்களும் ஊரவர்களும் பெற்றுக்கொள்வதற்கு ஒருபோதும் சந்தர்ப்பம் வாய்க்காது. இங்ஙனமெல்லா மிருத்தலினாலே ஆரம்பத்திற் சிலகாலத்திற்காயினும் இந்த விதமான எதிரிடை யிருத்தல் நன்மையாகும். இதனாற் பொருட்செலவுஞ் சிரமமும் ஏற்படுகின்றனவேயெனின் அவற்றையின்றி நன்மையை அடைதல் முடியாது. பிரதிநிதிகளும் ஊரவர்களும் விஷயங்களை நன்கு விளங்கியபின்னர் வேண்டுமேல் இந்த எதிரிடையை இல்லாதொழித்துவிடலாகும்.

ஆனால், தெரிவுக்கு முற்பட்டுநிற்போரும் அவர் பொருட்டு உழைப்போரும் தெரிவுரிமையுடையோரும் சிந்திக்கவேண்டியன சிலவுள. தெரிவுக்கு முற்பட்டுநிற்பவரும் அவருக்குத் துணைபுரிவோரும் ஒருபோதும் தம்முடைய எதிரி பக்கத்தாரைக்குறைகூறியும் நிந்தித்தும் கருமஞ் செய்யத் தலைப்படவொண்ணாது. இதனாலேயே மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. முற்பட்டுநிற்பவர் தாம் செய்ய நோக்கங் கொண்டிருக்கும் நன்மைகளையெடுத்துச் சொல்லலாமேயொழிய மற்றவருடைய நோக்கங்கள் பிழையென்று சொல்ல இவருக்கு அதிகாரமில்லையாம். முற்பட்டுநிற்பவருக்குத் துணையாகநிற்பவரும் அவருடைய திறமையையும் சுகுணங்களையும் எடுத்துப் பேசலாமேயன்றி மற்றவருடைய குறைகளை யெடுத்துச் சொல்லவொண்ணாது. ஏனென்றால் இருபகுதியாரும் கொண்ட நோக்கம் தேச கைங்கரியமாகிய நன்னோக்கமேயாம்.

இனி, ஊரவர்களாயுள்ளார் பொதுமகளிர்போல் உள்ளொன்று புறம்பொன்றாக வைத்து எல்லாருக்கும் ஓம் சொல்லி எவரையும் அனுப்பவொண்ணாது. தங்கள் விருப்பத்தை வெளியாகச் சொல்லவேண்டும். ஒருவரையொருவரைத் தட்டிவிட்டு வேடிக்கைபார்க்க நினைக்கவொண்ணாது. தம் மனச்சான்றுக்கு எவர் தக்கவராகப் புலப்படுகின்றாரோ அவர்பொருட்டுச் சம்மதஞ்சொல்லுதற்கும் அவருக்குத் துணை செய்வதற்கும் ஊரவர் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அதையிட்டு எதிர்க்கட்சியார் அப்படிச் செய்பவரைக் குறைகூறவொண்ணாது. இவைகளைச் சிந்தித்து நடப்பரேல் பிரதிநிதித் தெரிவு ஒரு சந்தோஷமான கருமமாகவிருக்கும்.

## குருபூசை.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான் சைவசமயமானது அந்நிய சமயத்தவரால் இடர்ப்படுத்தப்பட்டு ஒளிகுன்றுங் காலங்களில் பசுக்களாகிய ஆன்மாக்களை ஈடேற்ற வேண்டுமென்னும் கைம்மாறுகருதாத தமது பெருங்கருணையினால் சமயாசாரியர்களைத் தந்தருளிச் சைவசமயத்தை மலைமேற் றீபம்போலப் பிரகாசிக்கச்செய்வர். அவ்விதமாகத் திருவவதாரஞ்செய்தவர்கள் சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரும், சந்தானகுரவராகிய உமாபதிசிவாசாரியர் மெய்கண்டசிவாசாரியர் மறைஞானசம்பந்தசிவாசாரியர் அருணந்திசிவாசாரியர் என்னும் நால்வரும், திருத்தொண்டர் புராணத்திற் சொல்லப்பட்ட ஏனைய அறுபதின்மரும், திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளிய சேக்கிழார்நாயனாருமேயாவர். இவர்களுள் சமயகுரவர்நால்வரும் அதிசிரேஷ்டமுடையர். இச்சமயகுரவர் உலகை ஈடேற்றும் பொருட்டுத் திருவவதாரஞ்செய்து தாம் அநுபவித்த இடர்கள் அளப்பில. அவர்கள் கல்லோடுகட்டிக் கடலில் வீசப்பட்டும், சுண்ணாம்பறையுள் அடைக்கப்பட்டும், நஞ்சூட்டப்பட்டும், திருமடத்தில் அக்கினிப பிரவேசஞ்செய்யப்பட்டும், கொடியவாதம் புரிந்தும் சமயபரிபாலனம் செய்யவேண்டியவர்களானார்கள். எந்த எந்தச் சந்தர்ப்பத்தில் தமக்கு நேர்ந்த எந்த எந்த இடரினின்று நீங்கவேண்டித் திருவருளை முன்னிட்டு எவ்வெவ்விதமான பதிகங்கள் பாடினரென்பது அவர்களுடைய சரித்திரங்களைப் படிப்பதனால் இனிது விளங்கும். பிறவிப்பெருங்கடல் வாய்ப்பட்டுக் கரையேறும் வழி தெரியாது உழலும் எம்மைக் கரையேற்ற வல்ல தோணிபோன்றது அச்சமயாசாரியர்களுடைய சரித்திரங்களேயாம். சமயத்தை வளரச்செய்யவேண்டுமாயின் சமயாசாரியர்களுடைய சரித்திரங்களும் அவர்களுடைய கொள்கைகளும் உலகிற் பரவுதல்வேண்டும். அச்சரித்திரங்களினாலே ஆலயதரிசனம் எவ்விதம் செய்யப்படவேண்டுமென்பதும், ஆலய அமைப்பு இன்னதென்பதும், விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரம் முதலியனவற்றின் மகத்துவம் இவை என்பதும், நந்தனவனம் வைத்தல், திருத்தொண்டு செய்தல், அடியார்க்கு அமுதளித்தல் முதலியனவற்றால் எய்தும் பேறு இவை என்பதும், பக்குவமுதிர்ச்சி எய்தப்பெறுங் காலத்தில் அப்பரமகருணாநிதியாகிய சிவபெருமான் மீளா அடிமைக்கொண்டருளும்பொருட்டு எவ்வித திருக்கோலம் பூண்டு எழுந்தருளுவ ரென்பதும், சைவசமயிகளுக்கு இன்றியமையாத ஏனையனபலவும் கரதலாமலகம்போல வெளியாகும். நாம் இந்த அரிய பெரிய மானிட தேகத்தை எடுத்து "மந்திரவாட் பெற்றும் பகைவெல்லான் மற்றதுகொண், டந்தோதன் மெய்யை அரிந்தான் போன்று" வீணே இறந்துபடாது உய்ந்து ஈடேறும்பொருட்டு அப்பரம்பொருளாகிய சிவபெருமான் அநேக வழிகளையும் முறைகளையும் வகுத்தருளினர்.

ஒரு கருமத்தை முன்னிலைப்படுத்தி நன்னிலைக்குக் கொண்டுவந்த ஒருவரைப் பின்பற்றினாலன்றி அக்கருமத்திற் சித்தியடைதல் கூடாவாறு அக்காலத்தில் எமது சமயத்தை நன்னிலைப்படுத்தி முன்னிலைக்குக் கொண்டுவந்த அந்தச் சமயாசாரியர்களுடைய சரித்திரங்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் பின்பற்றினாலன்றி இக்காலத்திலும் எக்காலத்திலும் எமது சமயத்தை நன்னிலைப்படுத்துதல் கூடா. ஆன்றோர் அந்தச் சமயகுரவருடைய மகத்துவத்தைப்பற்றி,

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனும், சிற்கோலவாதவூர்த் தேசிகனும்—முற்கோலி, வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே, யெந்தைபிரானஞ்செழுத் தெங்கே".

என்று ஒரு வெண்பாவில் விளக்கிக் கூறினர்.

ஆகவின் சைவசமயம் அபிவிருத்தி எய்தி நன்கு பரிபாலிக்கப்படவேண்டுமாயின், ஆலய உற்சவங்கள் சமயசாஸ்திர முறைப்படி நடக்கவேண்டுமாயின், எமது சமயாசாரங்களும், சமயாநுஷ்டானங்களும் சமயதீட்சை செபம் தவம் தியானம் விபூதி ருத்திராக்கம் ஸ்ரீ பஞ்சாக்கரம் முதலியனவுஞ் சிறக்கவேண்டுமாயின், இது பெறுதற்கரிய பிறவி என்றும் அறிதற்கரிய அவதி என்றும் உணர்ந்து பிறிதொன்றை நாடுதற்கு நேரமின்றி மோட்ச சாம்பிராச்சியத்தை அடையவேண்டிய அந்த அவசரம் ஏற்படவேண்டுமாயின் எமது சமயகுரவர் முத்திப்பேறடைந்த புண்ணியதினத்தில் குருபூசையும், அவர்களுடைய சரித்திரப் பிரசங்கமும் தவறாது எந்த எந்த இடங்களிலும் நடைபெறச் செய்தல்வேண்டும்.

எமது யாழ்ப்பாணத்தில் அநேக ஆலயங்களிருந்தும், ஒவ்வொரு ஆலயத்தையும் சேர்ந்தவர்களாக அநேக சைவசமயிகளிருந்தும் இக்குருபூசை சில இடங்களில்மாத்திரம் நடைபெறுவது மிகவும் விசனத்திற்கிடமாகவிருக்கிறது. வேறு சில இடங்களில் சமயகுரவர் நால்வருடைய குருபூசை நடைபெறுவதாக அறிகின்றேம். இச்சமயகுரவருடைய சரித்திரங்களும் அவர்களுடைய கொள்கைகளும் உலகத்திற் பரவுமாயின் ஆலயங்களில் இக்காலத்தில் நடைபெறும் நவீன நாகரிகக் கொள்கைகளும் அடாத துராகிருதங்களும் ஒருபோதும் நிகழா.

இச்சமயாசாரியர்களுடைய சரித்திரத்தை அத்தியந்த ஆசையுடன் ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் ஈசுரபத்தியும் வைராக்கியமும் ஞானமும் தப்பாது கைவல்யமாகும். இத்திருத்தொண்டர் சரித்திரத்தைப் பாடியருளும்வண்ணம் சிதம்பர சபாநாதர் "உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்" என அடி எடுத்துக் கொடுத்தமையாலும், பரமசிவன் உமாதேவியாருக்கு நான்கு யுக தருமங்களையும் உபதேசித்தபின் கலியுகத்திலே அறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து நெறிமுறை பிறழாது சமயபரிபாலனஞ் செய்வரெனச் சிவரகசியத்திலேநவமாம்சித்திற் கூறப்படுதலினாலும், சைவசமயிகள் இத்திருத்தொண்டர் முத்தியடைந்த புண்ணிய தினங்களில் மேற்படி தொண்டர்களுடைய குருபூசையையும், அவர்களுடைய சரித்திர பிரசங்கத்தையும் ஆலயங்களிலும், திருமடங்களிலும், சைவவித்தியாசாலைகளிலும் தப்பாது சிரத்தையோடு செய்யும் பெருங் கடப்பாடு உடையராவர். இவ்விதம் செய்ய முடியாதவர்கள் சமயகுரவர் நால்வருடைய குருபூசையையேனும் தப்பாது செய்தல் அத்தியாவசியகமாகும்.

## அருட்பாக்கள் ஐந்து.

(குமரன்.)

சைவப்பெருமக்களாகிய நமக்கு உரிய தோத்திரப் பாசுரங்கள் அருட்பாக்கள் ஐந்துமாம். இவற்றைப் பஞ்சபாசுரங்கள் என்று பகர்வதுமுண்டு. இவ்வைந்தும்: தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பனவாம். இவற்றுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் திருவாய்மலர்ந்தருளியது தேவாரம் எனப்படும். மாணிக்கவாசகர் மலர்வாய்ப்பிறந்தது திருவாசகம் எனப்படும். திருவிசைப்பா திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பது நாயன்மார் ஓதியருளியதாகும். திருப்பல்லாண்டினைப் பாடினவர் சேந்தனாராவர். பெரியபுராணத்தைப் பாடியவர் சேக்கிழார் நாயனாராவார்.

இவ்வைந்தும் நிறைந்த அருட்சத்தியுடையனவா யிலங்குதலால் அருட்பாக்கள் எனப்படும். அருட் சத்தியாவது, அருளிற் கூறினும் வெகுண்டே கூறினும், கூறுவோர் விரும்பியாங்கு விளைதலாகும். அருளிற் கூறுதல் வாழ்த்துரையாகும். வெகுண்டு கூறுதல், தீயனபோயகல வெறுத்துரைத்தலாகும். என்பைப் பெண்ணாக்கியதும்முதலைவாய்ப்பிள்ளையையழைத்ததும்முன்னையதின்பாற்படும். புத்தரை வலைமகளாக்கியதும், புத்தநந்தி தலையில் இடி இடிக்கச் செய்ததும் பின்னையதின் பாற்படும். இவ்வாறு இவ்வருட்பாக்கள் ஐந்தானும் நிகழ்ந்த அற்புதங்கள் பலப்பல. சைவசமயாசாரியர் நால்வர் செய்தருளிய அற்புதங்களனைத்தும், அன்னோரன்ன அமுதமொழிகளின் வன்மையையே புலப்படுத்துகின்றன.

ஞானப்பாடல்களுக்கு நிறைந்த தெய்வசக்தியுண்டென்று நவில்வது நம்முடைய நாட்டிலே நமது மொழியிலேயேயாகும். வேற்றுநாட்டில், வேற்றுமொழியில், இவ்வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தெய்வசக்தி யுடைமையினாலேயே நமது நூல்கள் எல்லையில் பெருமையுடையனவாயிலங்குகின்றன. தெய்வசக்தி திகழ்வதற்குக் காரணம், அவ்வின்ப வுரைகளையோதியருளிய அடியவர் உளத்திலே இறைசிவன் வீற்றிருந்து யுண்மை யுரைகளை அன்னோர் வாயிலாக ஓதியருளுதலேயாகும். இதனை, "எனதுரைதனதுரையாக நீறணிந்தேறுகந்தேறிய நிமலன்" என்னும் திருஞானசம்பந்தப்பெருமானார் திருவாக்கும் நன்கு வலியுறுத்தும். எனவே, அடியவர் வாக்கு ஆண்டவன் வாக்காக விளங்குதலால் அவ்வாக்கு அருள் வாக்காகத் திகழ்தல் இனிது புலப்படும்.

இவ்வருள் நூல்கள் ஐந்தினும் உள்ள தோத்திரப் பாக்களைந்தும் பத்திச்சுவை கனிசொட்டும் பண்புடையனவா யிலங்குகின்றன. ஆதலின் அன்பும் கடலாக விளங்கும். இவ்வருட்பாக்களைந்தினையும் சைவப் பெருமக்களனைவரும் அவசியம் தினந்தோறும் பாராயணஞ்செய்து பயன் துய்த்தல்வேண்டும். நமது சிவபெருமான் தோத்திரப்பாசுரங்களில் என்றும் பெருவிருப்புடையவர். பாடுவோர்க்கு எல்லா நலங்களையும் ஈபவர். இதனை, "பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணி களைவாய்; அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளுமாறே" என்னும் அமுதவாக்குகளால் இனிது உணரலாம்.

பரமசிவனைப் பாடிப் பரவுதல் எளிதில் இன்பநெறியினை நல்க வல்லதாகும். பன்னாள் நாம் அவரை அரற்றி அரற்றி அழைப்போமானால், இவன் நம்மை அழைத்தல் ஒழியான் என்று, அவர் நமக்கு அவசியம் அருள்சுரப்பார். எல்லோருக்கும் புதிய பாடல்களைப் பாடும் சத்தியில்லாதுபோயினும், தாராளமாகப் பிறபெரியார் பாடியருளிய இன்பப்பாடல்களை எளிதிற் பாடலாம். நறுமணம் பொருந்திய மலர்களால் இனிய மாலைகளைத் தொடுத்தமைக்கத் தெரியாவிடினும் பிறர் தொடுத்தமைத்துள்ள தூய மாலைகளை எடுத்தணிவித்தலில் யாதொரு கஷ்டமுமில்லை.

சிலர் தங்களுக்கு இசையின்மையால் பாடுதல் எளிய தொன்றன்று என்று இயம்புகின்றார்கள். உலகிலுள்ள மக்களனைவருக்கும் இசை கைவரப்பெறுதல் இயலாததொன்றேயாம். ஒரு சிலருக்கே இசை நலன் அமைந்திருக்கும். இசை நலன் வாய்க்கப்பெறாத ஒரு காரணத்திற்காகத் தோத்திரப் பாசுரங்களைப் பாடிப் பயன்பெறுதொழிதல் சரியாகாது. இறைவனைப் பாடுவோர்க்கு இசைநலன் இருந்தாலுஞ்சரி, இல்லாவிட்டாலுஞ்சரி அன்னார் அன்பு ததும்ப மனமுருகப்பாடுவார்களானால் ஆண்டவன் அவர்கள் பாலிற்கு மகிழ்ந்து அருள்சுரப்பார். இதனை "கோழை மிடறாக கவிகோளு மிலவாக விசை கூடும் வகையால் — ஏழையடி யார்களவர் யாவை சொன சொன்மகிழுமீசன்" "சம்பந்தன் கருது பாடல் — கோழையா வழைப்பினுங் கூடுவார் நீடுவா னுலகி னூடே" எனும் இன்ப வாக்குகள் இனிது புலப்படுத்தும். ஆதலால் இசை நலன் உடையாரும் இலாரும், கற்றாரும் மற்றாரும் ஆடவர் பெண்டிர் அனைவரும் அன்போடு ஓதுவார்களாயின் யாவர்க்கும் இன்பவாழ்வு எளிதில் கைகூடும்.

எனவே மிகஎளியதும் அரிய பலனை அளிக்க வல்லதுமாகிய இவ்வின்ப நெறியினை யாவரும் கைக்கொள்ளுவார்களாக. மனமுருக மதுர வாசகங்களை மொழிந்து மாண்பு பெறுவார்களாக.

## சமாசாரம்.

யாழ்ப்பாணக்கிருஷிப்பாடசாலை:—இப்பாடசாலையிலே 14வயதுக்குட்பட்டமாணவரையே சேர்த்துப்படிப்பிக்க அரசினர் தீர்மானித்திருக்கின்றனராம்.

வெடிமருந்து விபத்து:—சென்ற வெள்ளிக்கிழமை தலையாளிக்கைரவர் கோயிலிலே அதிர்வெடிக்குழலின் பக்கத்தில்வைக்கப்பட்டிருந்த 8றாத்தல் வெடிமருந்தில் நெருப்புப்பற்றியகாரணத்தினால் அயலில் இருந்த சகோதரராகிய இருசிறுவர் எரிந்து அவருள் ஒருசிறுவன் அடுத்தநாள்காலை இறந்துவிட மற்றச்சிறுவன் அபாயமான நிலையிலிருக்கிறுனென அறிகின்றேம்.

புகையிரதக்கிரயம்:—புகைரதவிதத் தலைவர் பிரயாணக்கிரயவிகிதங்களைக்கிறிது குறைத்து அரசாட்சியாருக்கு ஓர் கணக்கனுப்பியிருக்கின்றனர். விகிதங்கள் நியாயமான அளவாயிருப்பதால் அரசாட்சியார் அவருடைய கணக்கை ஒப்புக்கொள்வார்களெனப் பத்திரிகைகள் பேசுகின்றன.

மதுபரிபாலனப் பரிசோதகரும் கள்ளும்:—இந்த மேமீ 8உ வியாழக்கிழமை இருமதுபரிபாலனப் பரிசோதகர்கள் வசாவிளானிலே சோரமாகக் கள்ளு விற்கும் ஒருவருடைய வீட்டினுட் பிரவேசித்துச் சோதனை செய்யும்பொழுது அங்குள்ள சிலராற் சருவப்பட்டார்கள். இக்கலகத்திற் சம்பந்தப்பட்ட சிலர் பிடிக்கப்பட்டார்கள். சிலர் தப்பியோடினர்.

அளவைப்பகுதிப்பரீட்சை:—அளவைப்பகுதியிலே கிளாக்குமாராகவும் டிறவ்ஸ்மன்களாகவும் உத்தியோகம் நடாத்துவதற்கு ஆட்களைத்தெரிவுசெய்வதற்குரியதோர்பரீட்சை ஆவணி மாதம் 12-திகதி நடைபெறும். தோற்றவிரும்புவோர் 17 வயதுக்கும் 24வயதுக்கும் இடையான பராயமுடையராயிருக்கவேண்டுமென்பதும் ஆனி மாதம் 30-ந் திகதிக்குமுன் தம் விண்ணப்பங்களைவித்தியாகத்தர் சந்தோருக்கு அனுப்பவேண்டுமென்பதும் ஒழுங்கு. மறுவிபரங்களை அளவைப்பகுதித்தலைவரிடங் கேட்டறிக.

### விவாகம்.

தொடுவாயிராச்சியப் புகைரதப் பகுதியிலுத்தியோகத்தமர்ந்திருக்கும் ஸ்ரீ ந. க. இரத்தினசபாபதிக்கும் தொடுவாயிராச்சியப்பகுதியில் புகைரதஸ்ரேசன்மாஸ்ரராயிருந்து இளைப்பாறியிருக்கும் கொழும்புத்துறை ஸ்ரீ வெ. மு. கனகரத்தினம் அவர்களினதும் கண்டியிலே ஓர் பிரபல நியாயதுரந்தரராயும் பிரசித்தநொத்தாரிசாயும் இருக்கும் ஸ்ரீ வெ. மு. சரவணமுத்து அவர்களினதும் மருகியும் கொழும்புத்துறையிலிருந்த ஸ்ரீ ச. மாணிக்கவாசகரவர்களின் சிரேஷ்ட புத்திரியுமாகிய சௌபாக்கியவதி சிவாநந்தநாயகிக்கும் வருகிற வியாழக்கிழமை காலை நிகழும் சுபமுகூர்த்தத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நடைபெறும். —சுடிக.

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

நான்காந்தரப் பூமிசாஸ்திரம்.—இது யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலை ஆசிரியர் ஸ்ரீ கா. இளையதம்பியவர்களால் இயற்றப்பட்டது. இதில் யாழ்ப்பாணப் பட்டினப் பிரிவின் படமும், பூகோளப் படமும், நீராவியின் தோற்றத்தைக் குறிக்கும் படங்களும, இலங்கையின் இயற்கைத் தோற்றத்தைக் காட்டும படங்களும பிறவும வரையப்பட்டுள்ளன. இந்நூல் மாணவருக்கு விசேஷ பூமிசாஸ்திர உணர்ச்சியைப் புகுத்துந் திறமையுடையது. இதன் விலை சதம 40. பிரதிகள் நூலாசிரியரிடம பெறற்பாலன.

பூமிசாஸ்திர ஆதாரபாடங்கள்.—இது யாழ்ப்பாணம அரசினர் சிக்ஷாபாடசாலை அதிபர் ஸ்ரீ அ. பொன்னையா அவர்களால் மூன்றும வகுப்பு மாணவர்களுக்கு உபயோகமாகும பொருட்டு வித்தியாகோட்டியாருடைய ஒழுங்குக்கு இணங்க இயற்றப்பட்டது. இதில் மாணவர் பூமியைப் பற்றிய விபரங்களைச் சிரமமின்றிக் கிரகித்துக்கொள்ளக்கூடிய நுட்பமான 24 சித்திரப் படங்கள் பொதியப்பெற்றிருக்கின்றன. இந்நூல் பூமிசாஸ்திரப் பிரவேசஞ் செய்யும சிறுவர்களுக்கு மிகச் சிறந்தது. இதன் விலை சதம 25 பிரதிகள் வண்ணார்பண்ணைச் சண்முகநாதன் புத்தகசாலையிலும மற்றும புத்தக வியாபாரிகளிடத்துமெ பெறற்பாலன.

பாரதச்சுருக்கம் (இரண்டாம பதிப்பு).—காலஞ்சென்ற (உவாட்டன்டேவி) ஸ்ரீ ஆ. முத்துத்தமபிப்பிள்ளை அவர்கள் இனிய தமிழ்வசன நடையில் எழுதி வெளியிட்ட பாரதச் சுருக்கத்தின் இரண்டாம பதிப்பு வெளிவந்துவிட்டது. பிரதிகள் வண்ணார்பண்ணை பிரித்தானிய புத்தகசாலை அதிபர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளையால் நாவலர் அச்சுக்கூடத்திலேயே அழகுற அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன. இப்பாரதச் சுருக்கம இந்த 1924-மஆ நிகழவிருக்கும "இன்ரர் ஆர்ட்ஸ்" (Inter Arts) பரீட்சைக்குத் தமிழ்ப் பாடங்களிலொன்றாகும. விலை ஒரு றுபா. பிரதிகள் வண்ணார்பண்ணை பிரித்தானியா புத்தகசாலையிலும ஏனைய புஸ்தக வியாபாரிகளிடத்தும பெறற்பாலன.

எமக்கனுப்பிய பிரதிகளை நன்றியறிதலுடன் ஏற்கும.

### பரிசளித்தல்

மேலைப்புலோலிச்சைவப்பிரகாச வித்தியாசாலையின் 35-வது வருடப்பரிசளிப்புக்கூட்டம் சென்ற பங்குனிமீ 30உ வெள்ளிக்கிழமை இரவு 6 மணிக்குமேல் மேற்படி வித்தியாசாலை மண்டபத்திலே மேற்படியூர்ச் சிவஞானப்பிரகாச சபையாரால் வழக்கம் போல நடத்தப்பட்டது.

அச்சமையம் மேற்படி வித்தியாசாலைப் பழையமாணவராகிய பிறிலத்தர் ஸ்ரீ வே. த. சுவாமிநாதர் அவர்கள் அக்கிராசனத்தமர்ந்து சபையைச்சிறப்புறநடப்பித்தார்கள். வழக்கம்போல் பிரசித்தபரீட்சை அதிகாரர்வாவு என்னும் வகைகளிற் தெரிவு செய்யப்பட்டமாணவர்களுக்கு சிவஞானப்பிரகாசசபையாரால் உபகரிக்கப்பட்ட பரிசுகளுந் தேவாரம்கல்லொழுக்கம் முதலியன எல்லாவகையிலும் அதிகதிறமை எனனும் வகைகளிற் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பழையமாணவர்களாகிய வித்தியாபிமானிகளால் தனித்தனியே உபகரிக்கப்பட்ட பரிசுகளும் சமயபாடம நிகண்டு வாசித்தல் கணிதம் என்னும்பாடங்களை அதிகதிறமையாய்ப் பயிற்றிய உபாத்தியாயர்களுக்கு பழையமாணவர்களாலும் வித்தியாபிமானிகளாலும் உபகரிக்கப்பட்ட பணப்பரிசுகளும் பாலபண்டிதர் ஸ்ரீ சி. சுப்பிரமணியதேசிகர் அவர்களால் வழங்கப்பட்டன. பிள்ளைகளுடைய மனனப்பிரசங்கங்களும் தேவாரவகுப்புப்பிள்ளைகள் தேவாரதிருவாசக திருப்புகழ் ஓதியதும் சபையாரை மிகவும் மகிழ்வுறச்செய்தன. என்றும் வித்தியாசாலை விருத்தியுறவும் பரிசளிப்புக்கூட்டம் வருடந்தோறும் செவ்வனே நடைபெறவும் திருவருள் சுரப்பதாக. சுபம்.

மேலைப்புலோலி — காரியதரிசி,
4. 5. 24. — சிவஞானப்பிரகாசசபை.

### சுபோதத் துணுக்கைகள்.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது )

#### சிவபரஞ்சுடரின்திருமேனி நிலை,

பிறப்பற்ற நமது பரமபதியாகிய சிவபெருமானுக்கு உரியதான ஒரு உருவமில்லை; அத்தயாநிதி எவ்வெவர் எவ்வெவ்வுருவமாக உபாசனை செய்கின்றார்களோ, அவரவர்க்கு அவ்வத்திருமேனியாகவிருந் தருள்வழங்குவர். அவரைவழிபடுவோரின் அன்பின் அளவுக்குத்தக்கவாறு அவ்வம் மூர்த்திகளில் வெளிப்பட்டு அருள் சுரத்தலால், அவரை வணங்கும் மெய்யடியார்களின் அன்பே அவரது உருவமும், அவ்வடியார்களின் மனமே ஆலயமுமாகும். இது பற்றியே, காரைக்காலம்மையாராலியற்றப்பெற்ற "அர்புதத்திருவந்தாதி" என்னும் பிரபந்தத்தில்,

"வானத்தானென்பாரு மென்கமற் றும்பர்
கோன், றனத்தா னென்பாருந் தாமென்க—
ஞானத்தான், முன்னஞ்சத் தாலிருண்ட மெய்
யொளிசேர் கண்டத்தான், என்னெஞ்சத் தா
னென்பன் யான்.'' என்று கூறியருளினார்.

இன்னும் அன்பேசிவம் என்பதற்கு, மெஞ்ஞானியாகிய திருமூலநாயனார் தாமியற்றிய திருமந்திரத்தில்,

"அன்புஞ் சிவமுமிரண்டெனப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலர்
அனபே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருப்தாரே''. என்று

திருவாய் மலர்ந்தருளினார். எமது பசுபதியானவர்"சிறப்பெதிர் நிகழ்வு"என்னும்முக்காலங்களிலும், என்றும் ஒரேபடித்தாய் நிலைபெற்றிருத்தலினாலும், மனவாக்குக்காயம் என்னுந் திரிகரணங்களாலும் சுத்தியுடைய மெய்யடியார்க்கு, "தனது கன்றுக்கிரங்குந் தலையீற்றுப்பசுப்போல'' அருள்சுரத்தலாலும், உண்மையே அவர் உருவம் எனவும், தமக்கு ஒருவரும் அறிவிப்பாரின்றி அறிவுக்கறிவாய் எல்லாவுயிர்கட்கும் உணர்த்தும் பேரறிவாயிருத்தலினால் ஞானமே அவர் உருவம் எனவும், என்ஞான்றும் வரம்பிலின்பமுடையராம் தம்மை வந்தித்த ஆன்மாக்கட்கு நித்தியானந்த முதவுதலினால் ஆனந்தமே அவர் உருவமென்றும், சொல்லப்படும்; அதுபற்றியே அவரைச் "சச்சிதானந் உருவன்'' ஆன்றோர் கூறுவர். கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்து சர்வவியாபியாயிருத்தலினால், எல்லாப் பொருள்களும் அவரது திருமேனியாகும். நிலம், நீர், வளி, தீ, விசும்பு, நிலா, பகலோன், ஆன்மா ஆகிய இவ்வெட்டும் அவர் திருமேனியா யிருத்தலினால் அவரை அட்டமூர்த்தி என்பர். இதனாலன்றே பிருதிவி ரூபமான சொரூப வணக்கத்தையும், யாகாதி முதலிய அக்கினிவணக்கத்தையும், கங்கை முதலிய அப்பு வணக்கத்தையும், சூரியபூசை, சந்திரபூசை யென்று மிருவணக்கங்களையும், அடியார்களைக் கடவுளாகப் பாவித்து வழிபடும் ஆன்மவணக்கத்தினையும் மெய்யன்பர்கள் சந்ததமும் கைக்கொண் டொழுகிவருகின்றார்கள். இங்ஙனம் கடவுள் அட்ட மூர்த்தமாக நீக்கமற நிறைந்திருப்பினும், அவையே தாமாகாமல் அவற்றின் வேறுன முழுமுதற் பொருளாயிருக்கின்றார். அங்ஙனம் கடவுள் தமக்கென ஒருஉருவமுமில்லாதவராகவும், நமது உணர்வுக் கெட்டாதவராகவு மிருத்தலால், அவரை நாம் எப்படிவழிபடுவது என ஒரு ஆட்சேபம் நிகழுமாயின் அவர் தமக்கென ஒரு நாமமும், ஒரு உருவமும் இல்லாதவராயும, ஆன்மாக்களைப் பிறவிச்சாகரத்தில் நின்றுங் கரையேற்றவேண்டுமென்று திருவுள்ளத்தில் மூகிழ்த்த பெருங்கருணையினல், பற்பல அருள்வடிவங்களைத்தாங்கிப் பஞ்சகிருத்தியங்களையும் நடாத்துகின்றார். கருணையே திருமேனியாகக் கொண்ட அப்பரம்பொருள் தம்மின வேறுகாது அக்கினியிற் சூடுபோன்ற அபின்னசத்தி அல்லது வல்லமை என்னும் தேவியை யுடையவராய், ஆன்மாக்களுக்கெல்லாம் தந்தையுந் தாயுமாயெழுந்தருளியிருந்துவேண்டியவேண்டியாங்கு அருள்புரிகின்றார். அப்பரமேட்டி ஆன்மகோடிகளுக்குத் தந்தையுந் தாயுமாகுந் திருமேனி கொள்ளாவிடில், அவருக்குப் படைப்பு முதலிய தொழில்களிரா. இவ்வுண்மையினை யறியாத அஞ்ஞானிகள் கடவுளைத் தந்தையுந் தாயுமாக வழிபடும் மெய்ஞ்ஞானிகளைப் பார்த்து, உங்கள் கடவுளுக்கு மனைவி மக்களும் உளரோ! என எள்ளி நகையாடுகின்றார்கள். இவர்கள் கடவுளைத் தந்தையாகமாத்திரம் எண்ணி வழிபடுவர். அந்தோ! இவர்கள் மதி இருந்தவாறு என்னை? தாயின்றித் தந்தையில்லை ஆதலாலும், தந்தையைக்காட்டிலுந் தாய்க்கே மக்களிடத்தில் அன்பு அதிகமாதலினாலும், தாயினும் மிக்க தயாநிதியாகிய சிவபெருமானைத் தாயாயுந் தந்தையாயும் வழிபடுதலே சாலச் சிறப்புடைத்தாம். அப்பெருமான் எமக்கு அன்னை தந்தை மாத்திரமாகவா இருக்கின்றார்? எமக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் வரும போது ஆட்கொள்ளும் ஞானசாரியராயுமிருக்கின்றார். நாம் தீவினைகளைச் செய்யப் பிரயத்தனப்படும்போது, மனச்சாட்சியாயிருந்து அவற்றைச் செய்யவேண்டாமெனத் தடுக்கும் தோழனுமாகவுமிருக்கின்றார். இதுபற்றியே சமணசமயக் கடலையும், பிறவிக்கடலையும் ஸ்ரீ பஞ்சாட்சர மென்னுந் தெப்பத்தால் கடந்து முத்திக்கரையேறிய திருநாவுக்கரசுநாயனார்

"அப்பனீ யம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
யொப்புடைய மாதரு மொண்பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
இறைவநீ யேறூர்ந்த செல்வநீயே.''

என்று கூறியருளினார். அவ்விறைவனுக்குச் சோமசூரியாக்னி கண்களாகவும், வாயு மூச்சாகவும. சகல உலகங்களும் சரீர மாகவும், உயிர்களெல்லாம் உறுப்புகளாகவும், திக்குகள் ஆடையாகவும் அமைந்திருக்கின்றன. அன்பார்ந்த சகோதரசகோதரிகளே! அறவாழியந்தணராகிய சிவபிரான் தமதடியாரை யாட்கொள்ளும் பண்ணங் கொண்ட அருள்வடிவங்கள் அளப்பிலவாயினும், சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையராகிய நம்போலியர் வழிபட்டுய்யும்வண்ணம் கொண்ட திருமேனிகள் குருலிங்கசங்கமம் என்னும் மூன்றுமாம். பாலானது பசுவின சரீரம் முழுதும் வியாபித்திருப்பினும் அதன் முலைவழியாகவே சுரப்பதுபோல, கடவுளுக்கும் குருலிங்கசங்கமமென்னும் மூன்றிடங்களுமே அடியார்கள் எளிதில் வழிபட்டு அவர் அருளைப் பெறுதற்குரிய முக்கிய இடங்களாயிருக்கின்றன. ஆதலால் அவ்விடங்களிலே நாம் அநவரதமும் பக்தி செலுத்தி வழிபட்டு உய்யக்கடவோமாக.

## கடிதம்.

### யாழ்ப்பாண வீரன்.

யாழ்ப்பாண நங்காய்!

நின்வயிற்றுதித்த வீரசெம்மல் ஸ்ரீமாந். அ. சபாபதிப்பிள்ளை மாண்டனன் என்று மனங்கலங்குகின்றனையா? மண்ணில் உதித்தோர் மண்ணுவதை நாம் தினம் தினம் காண்கின்றேமே. பின் கவலையேதுக்கு. நங்காய்! உன் வயிற்றிலுதித்து உன் சோறு தின்று உன்னை அலட்சியஞ்செய்து உனக்குச் சேவை செய்யாது தம்மைத் தாமே உயர்த்த எண்ணி அவ்வெண்ணத்தில் ஏமாந்து மாண்டுமடிந்துபோய கபடநாடகதாரிகளுக்காக நீ புலம்புதி. சுத்த வீர புருடர்களுக்காய்க் கலங்காதே.

நங்காய்! ஸ்ரீமாந். அ. சபாபதிப்பிள்ளை சுத்தவீரபுருடர். யாழ்ப்பாண வாசிகள் இவ்வுண்மையை ஒருபோதும் மறுக்கமாட்டார்கள். சென்றுபோன முப்பத்தைந்து நாற்பது வருடங்களாக யாழ்ப்பாணத் தமிழரின் நிலை எவ்வளவு நிர்ப்பந்தமான நிலையிலிருந்ததென்பதை ஊன்றி யோசிப்போர் நன்கறிவர். நம் அதிஷ்டவசத்தால் புண்ணியமே உருவெடுத்தாற்போன்ற புண்ணிய மூர்த்தியாகிய நாவலப்பெருமானின் அரும் பெரும் சேவையால் ஞான சூரியன் உதயஞ்செய்ய, அச்சூரியனின் ஒளியானது தேசத்தில் வீசப்பெற்ற நங்காய்! உன் வயிற்றுதித்த சில வீரபுருடர்கள் உன் தேசசேவைக்காக ஊழியஞ் செய்ய ஒருங்கு கூடி ஓர் சபையை ஸ்தாபித்தனர். அச்சபையின் அதிகாரவர்க்கத்துள் திருவனந்தபுரம் சிரேஷ்ட நீதிபதி ஸ்ரீ செல்லப்பாபிள்ளை யவர்களைத் தலைவராகக்கொண்டு ஸ்ரீ அப்புக்காத்து நாகலிங்கம் ஸ்ரீ பசுபதிச்செட்டியார் ஸ்ரீ கைலாசபிள்ளை பிரக்கிராசியார் ஸ்ரீ காசிப்பிள்ளை ஸ்ரீ அ. சபாபதிப்பிள்ளை இன்னுஞ் சிலர் சேர்ந்திருந்தனர். இவர்களுள் நீதிபதி ஸ்ரீ செல்லப்பாபிள்ளையவர்களும் ஸ்ரீ அப்புக்காத்து நாகலிங்கமவர்களும் அரும்பெரும்சமர்செய்து வெற்றிக்கொடிகாட்டி மடிந்தபோக, அவ்வெற்றிக்கொடியின் கீழ் நின்று அதனை இதுபரியந்தம் காப்பாற்றிவந்தவீரதீரத்தைநானெதென்றுரைப்பேன்; என்னென்றெழுதவேன் நங்காய்! நின்வயிற்றுதித்த வீரர்களுள் இவரேஉத்தம வீரர் என்று கூறுவதில் எள்ளளவேனும் இழுக்குண்டாகாது. என்னை? நம் கண்முன்னே அநேக கனவான்கள் ஆங்கிலம் கற்று அரசசேவையிற் சேர்ந்து தொழில்பார்த்துப் பின் பொழுதுபோக்கிற்காகவும் டகமை விரும்பியும் தேசசேவைக்கென்று வெளிவந்து வேஷம்போட்டு நடித்துக்காட்டிப் போய்விட்டனர். இப்பிரபுவோவெனில், அப்படியாகாது தாம் கற்ற ஆங்கிலக் கல்வியின் உதவியினும் ஆண்டவனுடைய சித்தத்தின் பெருமையினாலும் தன் வியாபாரத் தொழிலோடு தேசத்தொண்டையே பெரிதென மதித்துவந்தனர். இவரது வீட்டிற்குச் சில கரும நிமித்தம் நான் பன்முறை போவதுண்டு. எந்த நேரத்திலும் இவர் சோம்பலாய் இருந்ததைக் கண்டதே கிடையாது. நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் பத்திரிகையைப் படிப்பார். அல்லது எழுதுவார். இதுமட்டா, இப்படியான நிலையில் இருக்கும்போது அவரிடம் பலர் பல கருமங்களுக்காக வந்து நிற்பார்கள். சிலர் ஐயா எருவுக்குக் காசு தேவை என்பார்கள். சிலர் புகையிலை வியாபாரத்தை நோக்கி வருவர்

அநுபந்தம் பார்க்குக.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ச பெற்று அடைவு பிடிக்கும் வண்-கிழக்கு பஞ்சாட்சரக்குருக்கள் தியாகராசக்குருக்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டியநகைகளின் விபரம்:—

1922ஞு

| நம். | மீ | உ | ரூ. | ச. | ஊர் | பெயர் | நகை விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 529 | மார். | 7 | 13 | | கொக்குவில் | மா. வேலுப்பிள்ளை | தாலிக்கொடி 1 |
| 530 | ,, | 8 | 12 | 50 | கொக்குவில் | ஆ. சின்னையா | மோதிரம் 1 |
| 553 | ,, | 13 | 20 | 4 | கொக்குவில் | நா. முத்தன் | தாலிக்கொடி 1 |
| 561 | ,, | 14 | 22 | 50 | சங்கானை | வ. கந்தையா | சங்கிலி 1 |
| 675 | ,, | 29 | 20 | 4 | இணுவில் | தி. கயிலாசநாதக்குருக்கள் | வெள்ளிச் சங்கிலி சோடி 1, கூடு 1, உருத்திராக்ஷ முகப்பு 1 |
| 697 | தை | 1 | 8 | | மானிப்பாய் | சி. கந்தையா | வெள்ளிச்சங்கிலிசோடி 1 |
| 728 | ,, | 6 | 12 | 4 | வண்-கிழக்கு | றீ. றி. ஞெமிசிங்கோ | மோதிரம் 1 |
| 831 | ,, | 21 | 10 | 4 | கந்தர்மடம் | அ. சுந்தரம்பிள்ளை | வெள்ளிச்சங்கிலிசோடி 1 |
| 857 | ,, | 24 | 15 | 4 | திருநெல்வேலி | வை. வேலுப்பிள்ளை | வெள்ளிப்பாதசரம் ஒற்றை சிமிக்கி சோடி 1 |
| 894 | மாசி | 1 | 12 | 4 | திருநெல்வேலி | வை. வேலுப்பிள்ளை | பாதசரம் ஒற்றை |
| 1024 | பங். | 10 | 40 | 4 | இணுவில் | ஆ. அப்பாக்குட்டி | தாலிக்கொடி 1 |
| 1025 | ,, | 10 | 15 | 4 | வண்-மேற்கு | க. பொன்னையா | வெள்ளிப்பாதசரம் சோடி 1 |
| 1035 | ,, | 11 | 33 | 25 | வண்-கிழக்கு | த. தம்பிப்பிள்ளை | ஓப்பின்காதோலை சோடி I |
| 1039 | ,, | 11 | 10 | 4 | திருநெல்வேலி | இ. கந்தையா | வெள்ளிச்சங்கிலி சோடி 1 |
| 1066 | ,, | 15 | 19 | 4 | வண்-மேற்கு | வ. பொன்னுத்துரை | கௌத்தோர்1, குப்பிக் கடுக்கன் சோடி 1 |
| 1129 | ,, | 26 | 10 | 4 | வண்-மேற்கு | வே. துரைச்சாமி | காட்டுக்கடுக்கன்சோடி1 கட்டைவாழி சோடி 1 |
| 1136 | ,, | 27 | 40 | 4 | வண்-கிழக்கு | க. கார்த்திகேசு | பட்டணக்காப்பு சோடி 1 |
| 1150 | சித். | 1 | 17 | 4 | வண்-கிழக்கு | க. அப்பாக்குட்டி | சிகப்புக்காதோலைசோடி 1 |
| 1219 | ,, | 21 | 20 | 4 | வண்-மேற்கு | ஆ. கணபதிப்பிள்ளை | வெள்ளிப்பாதசரம்சோடி 1 |
| 1234 | ,, | 23 | 25 | 4 | இணுவில் | சி. பொன்னம்பலம் | பொன் அட்டியல் 1 |
| 1253 | ,, | 28 | 15 | 4 | ஆனைக்கோட்டை | சி. அப்பாக்குட்டி | வெள்ளிப்பாதசரம்சோடி 1 |

விற்பனவு:—இதற்காட்சிஞு வைகாசிமீ 4உ (17-5 24) சனிக்கிழமை காலை 8மணிதொடக்கம் எடுபட்ட நகை பிறீங்கலாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis, 477.)

வெக்தீஸ்மேஸ்தர்,
அரு. செல்லையாஉடையார்,

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன.
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெட்லும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாதமுள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

# தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவாராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட்கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குஷ்டரோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, மூத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேகவூரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K.** வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)






அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் பஸ்ட்கிளாஸ்(முதல்தர) தேவஔஷதங்களென தங்கமெடலும், வைத்தியபதிபட்டமும்பெற்ற

# குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினால் தளுக்கர நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது, பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கோடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவாராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.
சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துக்கள்,
கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை,
சூலைநீர், முதலியன நீங்கும்.

குஷ்டநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.
100-வேளை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 20-வேளை ரூ. 10.
ஏழை என்று ரூபிப்பவர்களுக்கு பாதி விலை. வி. பி. சார்ஜ் வேறு.

வீரியவிர்த்திக்கு நிகரற்ற
## மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு ஈகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இவ்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.
120 குளிகை ரூ. 10 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு

திருச்சி கா. மி. மு. இப்ராம்ஸா 3-1-23-ல் எழுதுகிறார்:
தங்கள் மன்மதகோலாகல குளிகையை சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்பு தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
**C. மலையப்பசாமி பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி, S. I.

(Q. (A) 46)

25-8-23ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதி பட்டமும் பெற்றவர்.

# டி. ஆர். கே. மகரத்வஜம்.

உண்மை அறிய ஒரேமுறை பரீக்ஷியுங்கள்!

இந்தியா பர்மா சிலோன் இத்தேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் அனுபவித்து நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றுள்ளது. இதை யாதொரு பத்தியமுமின்றி ஆண், பெண், வாலிபர், விருத்தாப்பியர் யாவரும் எத்தேசத்திலும், எக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

எங்கள் மகரத்வஜம் எல்லா வியாதிகளுக்கும் சஞ்சீவியைப்போன்றது.
பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கோடுக்கப்படும்.

புடைத்து ஒடக்கூடிய ரஸம், கெந்தகம் முதலிய சரக்குகளை இடை குறையாமல் முப்பூவினால் அப்படியே கட்டி அதில் தங்கம் சேர்த்து செந்தூரித்து அப்ரேக், அயம், காந்தம், முத்து, பவளம், முதலிய பஸ்ப செந்தூரங்களும், கஸ்தூரி, கோரோஜனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், பனுகு முதலிய அநேக பௌஷ்டிக தாதுவர்க்க சற்பமூலிகை சத்துக்களும் சேர்த்து மிக அபூர்வமுறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு சம்பவிக்கக்கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகு சீக்கிரத்தில் நிவர்த்திக்கும். அநேக மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாமல் நம்பிக்கை யிழந்தவர்கள் இதனால் குணமடைவது நிச்சயம். இது ஓர் கற்பத்துக்குச் சமானமானது. குஷ்டம், கிரந்தி, மேகவூரல், சூலை, நீரழிவு, வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், க்ஷயம், காசம், இருமல், கஷ்டசுவாசம், குன்மம், பெண்கள் மாதவிடாய், வயிற்றுவலி, சுரம், ஜன்னி, பிளேக், முதலிய கர்ம வியாதிகளை கண்டிப்பாய் நிவர்த்திக்கும். அல்லாமல் நாளுக்குநாள் வீரியபலம் அதிகரித்து சற்பசரீரம்போல் வச்சிரகாயமாகிவிடும். உபயோகிக்கும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

10-மாத்திரைகள் புட்டி 1க்கு ரூ. 9-0-0. 30-மாத்திரைகள் ரூ. 5-0-0.
தபால் சார்ஜ் வேறு.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கோடுக்கும்.
சீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)
அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை இன்றே பரீட்சித்துப் பார்க்கவும்.

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரீக்ஷை பார்க்கலாம்! இவ்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20 பில்ஸ் ரூ. 2-0-0. வி. பி. சார்ஜ் வேறு.

### தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலுஞ் சரி காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, சுபக்கட்டு இவைகள் அவசியம் தீரும். புட்டி 1க்கு ரூ. 4.

### நாகபஸ்பம்.

சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல் மூலமுளை மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதி சீக்கிரம் குணமாகும். முளை தானே கரையும். அநுபவத்தில் கைகண்டது. புட்டி 1க்கு ரூ. 4.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்த காரியசித்தி மென்மேலும் பெருகும். சொத்துநோய், அவமிருத்துதோஷம், மேக வியாதிகள் அணுகாது. உபயோகிக்கும் முறை மணியுடன் வரும். மணி 1க்கு ரூபா 2. 6 மணி ரூபா 10.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூ 2.

பினாங்கு, சிங்கப்பூர், கோட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை, பழனி, S I.

M. 32).

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடுழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேசியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சாப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இத்தனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது வைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோர்ட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.